## வீதி அபிவிருத்தி அதிகாரசபை - 2014

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்க தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 49 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1981 இன் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 16(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் இலங்கை முதலீட்டுச் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையிற் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கொல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) **எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் - 1- நிதிக்கூற்றுகளின் சமர்ப்பிப்பு-** ரூபா 466,561,476 தொகையான செலுத்தவேண்டிய குத்தகை வாடகை மற்றும் ரூபா 411,688,613 தொகையான தொங்கலிலுள்ள வட்டி என்பன முறையே நடைமுயைல்லாப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் தனித்தனியாக கணக்கிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபையானது செலுத்த வேண்டிய மொத்த குத்தகை மற்றும் தொங்களிலுள்ள வட்டி நடைமுறை பொறுப்புக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) **எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்-** ரூபா 970,844,975 கிரயத்திலான முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட அதிகாரசபையால் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் நிலையான சொத்துக்கள் நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 வாடிக்கையாளர் வைப்பிலுள்ள ரூபா 1,887,870 கூட்டு மொத்த தொகையான வரவு மீதிகள் செலுத்த வேண்டிய வாடிக்கையாளர் வைப்பு மீதிகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) தொடர்ந்து பல ஆண்டுகளாக பெறப்பட்ட ரூபா 6,101,220 தொகையான வாடகை முற்பணம் பிற்போட்ட வருமானமாக நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் காட்டுவதற்கு பதிலாக நடைமுறைப் பொறுப்பின் கீழ் கடன்கொடுத்தோர் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் எஸ்பீடி 01 ஆம் இலக்க வெளியீட்டின் 3(49) ஆம் பிரிவின் பிரகாரம், ஒப்பந்தங்கள் உரிய திகதியில் பூர்த்தியாக்கப்பட்டிருக்காவிடின் தண்டப்பணங்கள் தாமதக் கட்டணங்களிலிருந்தான

வருமானமாக சாட்டுதல் செய்யப்பட்டு கணக்கிட வேண்டும். இருந்த போதிலும், 2009- 2013 வரையான காலத்தின் போது அதிகாரசபையால் சாட்டுதல் செய்யப்பட்ட மற்றும் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 502,465,116 கூட்டுமொத்த தொகையான 396 தண்டப்பணங்கள் வருமானத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 02 பிடிகாசு பேரேட்டு கணக்கிலுள்ள ரூபா 5,769,729 கூட்டு மொத்த தொகையான வரவு மீதிகள், செலுத்த வேண்டிய பிடிகாசு மீதிகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது.

(உ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் பிடிகாசு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 4,060,661,225 மற்றும் ரூபா 4,405,339,648 ஆக முறையே தனித்தனியாக குறிப்பு மற்றும் பட்டியல் என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, ரூபா 8,466,000,903 கூட்டு மொத்த தொகையான பிடி காசு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் தனித்தனியான அடிப்படையில் சமர்ப்பிக்காமை காரணமாக மெய்மையாய்வு செய்யமுடியாதிருந்தது.

(ஊ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா 1,000 மில்லியன் தொகையான வாடிக்கையாளர் வைப்புக்கள் வாடிக்கையாளர் வைப்புக் கணக்கிற்கு செலவு வைபபதற்குப் பதிலாக பெறவேண்டிய கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. எனவே, நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறை பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்ட முறையே பெறவேண்டிய கணக்குகள் மற்றும் வாடிக்கையாளர் வைப்புக் கணக்கு மீதிகள் ரூபா 1,000 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) தொழிலாரம்பிப்பு முற்பணங்களின் அறவீடுகள் மீது எழுந்த ரூபா 2,332,173 ஆன செலவு மீதி நடைமுறை சொத்துக்களின் கீழ் ரூபா 7,144 மில்லியன் தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததால் ரூபா 2,332,173 தொழிலாரம்பிப்பு ஆல் முற்பணங்கள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 9.32 கிலோ மீற்றர் நீளமான கரவெலப்பிட்டியிலிருந்து கடவத்தை வரையான வெளிச்சுற்று வீதியின் நிர்மாணம் தொடர்பில் 2014 இல் செலுத்தப்பட்ட ரூபா 182,265,942 தொகையான ஆலோசனைக் கட்டணம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் கட்டிடங்கள் மீதான நடைபெறும் வேலையாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஐ) வங்கி கடன் கணக்கின் ஆரம்ப மீதிக்கு ரூபா 32,469,175 ஆன தொகை எடுக்கப்பட்டிருக்கவில்லை, ஆதலால் கடன் கணக்கு மீதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 107,304,314,019 ஆன மொத்த வங்கி கடன் மீதிகள் 2015 ஆம் ஆண்டின் வங்கிக் கணக்கின் செலுத்த வேண்டிய பகுதியாக நடைமுறை பொறுப்புக்களில் ரூபா 4,147,234,771 ஆன தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தலின் பிரகாரம், இது ரூபா 4,220,578,423 ஆக காட்டப்பட்டிருந்தது எனவே, நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 73,343,652 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) வீதி புனரமைப்பு மற்றும் முற்னேற்றங்களின் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்கு சொந்தமான ரூபா 218,960,500 பெறுமதியான மோட்டார் வாகனங்கள் மீளாய்வாண்டிற்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அத்தகைய வாகனங்களின் பெறுமதி கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஔ) நிர்மாணிக்கப்பட்ட ரூபா 313,208,798 பெறுமதியான கட்டிடமுள்ள காணியின் பெறுமதி பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இந்த காணி அதிகாரசபை தாபித்த காலத்தில் நெடுஞ்சாலைகள் திணைக்களத்தால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தால் இலவச மானியமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு காணியை ஒதுக்கீடுவதற்கு அனுமதித்திருந்தது.

(க) கொழும்பு கட்டுநாயக்க அதிவேக பாதை செயற்திட்டத்திற்கு சொந்தமான ரூபா 20,009,499 பெறுமதியான நிலையான சொத்துக்கள் 2014 திசெம்பர் 31 அளவில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அத்தகைய சொத்துக்களின் பெறுமதி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(கா) ரூபா 3,488,240 கூட்டு மொத்த தொகையான 394 விடயங்கள் தொடர்பான நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் பெறுமதியிடப்பட்டிருக்காத 200 விடயங்கள் தொடர்பில் வீதி புனரமைப்பு மற்றும் முன்னேற்றங்களின் இரண்டு வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களால் கொள்வனவு செய்யப்பட்டு பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட நிலையான சொத்துக்கள் என்பவற்றின் பெறுமதி மீளாய்வாண்டு வரையும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் பெறுமதியிடப்பட்டு உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. ஆகவே, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்காக முறையே ரூபா 348,824 மற்றும் ரூபா 697,648 பெறுமதியான பெறுமானத்தேய்வு கணக்குகளிற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(கி) ரூபா 97.51 மில்லியனிற்கு சமமான அவுஸ்திரேலிய டொலர் 58,500 மற்றும் ரூபா 30.13 மில்லியனிற்கு சமமான யூரோ 135,900 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு இயந்திரங்கள் ஒரு பல்துறை செயற்பாட்டு வலையமைப்பு அளவை வாகனங்கள் (எம்எவ்என்எஸ்சீ) மற்றும் நிறையிடல் அளவை மீற்றர் (எவ்டபிள்யூடி) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) நிலையான சொத்துக்களின் கைதவிர்ப்பிலிருந்து பெறப்பட்ட ரூபா 16,418,233 ஆன விற்பனைப் பெறுகைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஏனைய வருமானமாக காட்டப்பட்டிருந்த போதிலும் அத்தகைய சொத்துக்களின் கிரயம் அதிகாரசபையால் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன் மீதிகளிற்கும் உரிய வங்கியால் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 3,639,226,411 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டன. மேலும், வித்தியாசங்களிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கடனளிக்கும் முகவர் | நிதிக்கூற்றுக்களின் படி தொகை | வங்கி உறுதிப்படுத்தலின் படி தொகை | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| தேசிய சேமிப்பு வங்கி | 49,268,963,075 | 49,217,723,859 | 51,239,216 |
| இலங்கை வங்கி | 23,525,258,779 | 20,551,593,117 | 2,973,665,662 |

| | | | |
|---|---|---|---|
| மக்கள் வங்கி | 12,799,588,721 | 13,413,900,752 | 614,312,031 |
| ஹட்டன் நஷனல் வங்கி | 12,176,235,085 | 12,176,244,587 | 9,502 |
| **மொத்தம்** | **97,770,045,660** | **95,359,462,315** | **3,639,226,411** |

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நெடுஞ்சாலைகளின் கிரயத்திற்கும் நேரொத்த செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுகளிலுள்ள நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கிரயத்திற்கும் இடையில் ரூபா 7,016,408,503 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டன.

(இ) வீதி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களிற்கும் 03 பிராந்தி அலுவலகங்கள் மற்றும் ஒரு தலைமை அலுவலக வங்கி கணக்கின் வங்கி மீதிகளிற்கும் இடையில் ரூபா 40,226 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 பெற வேண்டிய மறறும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) வாடிக்கையாளர் வைப்புக்கள்

105 வாடிக்கையாளர்கள் தொடர்பில் ரூபா 198,474,099 தொகையான வாடிக்கையாளர் வைப்புக்கள் 1 முதல் 6 ஆண்டுகள் வரையான வீச்செல்லை கொண்ட காலத்திற்கு இடையில் தீர்க்கப்படாமல் இருந்தது. மேலும் 134 வாடிக்கையாளர் தொடர்பில் ரூபா 257,057,468 தொகையான வாடிக்கையாளர் வைப்புக்கள் 2010 முதல் 2013 வரையான வீச்செல்லை கொண்ட காலமாக வைப்புக்கள் பெறப்பட்ட திகதியிலிருந்து மாற்றமடையாதிருந்தது.

#### (ஆ) முற்பணக் கொடுப்பனவு

(i) முற்பணக்கணக்கில்

- வழங்கப்பட்ட முற்பணக் கணக்கில் ''மஹா நெகும'' வீதி நிர்மாண மற்றும் உபகரண கம்பனி என்பவற்றிடமிருந்து பெறவேண்டிய ஒரு ஆண்டினை விட பழமைவாய்ந்த ரூபா 3,614,943 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

- அதிகாரசபையானது மீளாய்வாண்டு இறுதிவரையும் ஒரு ஆண்டினைவிட பழமைவாய்ந்த ரூபா 10,020,158 கூட்டு மொத்த தொகையான செலுத்த வேண்டிய முற்பணக் கணக்குகளை தீர்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

- மீளாய்வாண்டு இறுதிவரையும் முறையே ''மஹா நெகும'' வீதி நிர்மாண மற்றும் உபகரண கம்பனி மற்றும் ''மஹா நெகும'' ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் கம்பனி என்பன தொடர்பான ரூபா 2,377,388 தொகையான உள்ளபடியான வேலை மற்றும் சீட்டுக்களை தீர்ப்பதற்கு நடடிவக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 02 ஒப்பந்தகாரர்கள் தொடர்பில் ரூபா 24,344,177 தொகையான கடன் மீதிகள் ''முற்பணக் கணக்காக'' காட்டப்பட்டிருந்ததுடன் அவை ஒப்பந்தகாரர்களிடமிருந்து அறவிட வேண்டியவையாக இருந்ததென அவதானிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த தொகையை தீர்ப்பதற்கு 2014 திசெம்பர் 31 வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2013 ஆம் ஆண்டின் போது 05 ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 22,046,094 தொகையான முற்பணக் கணக்கில் நோக்கங்கள் பூர்த்தியான பின்னர் பெறப்பட்ட முற்பணங்கள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 வரையும் ஒப்பந்தகாரரால் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தொழிலாரம்பிப்பு முற்பணங்கள்

- தயட்ட கிருல செயற்திட்டம் -2014 இற்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட ரூபா 2,000 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்களை 2015 யூன் வரை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2004 முதல் 2011 வரையான ஆண்டுகளின் போது 21 ஒப்பந்தகாரர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 275,245,308 தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

- 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் வீதி துறை உதவி செயற்திட்டம் என்பவற்றிற்கு வழங்கப்பட்ட முறையே ரூபா 601,000,000 மற்றும் ரூபா 237,110 தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கொள்வனவு முற்பணம்

வழங்குநர்களிற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் அவர்களிற்கு வழங்கப்பட்ட நோக்கங்கள் முடிவடைந்த பின்னர் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2011, 2012 மறறும் 2013 மற்றும் முன்னைய 05 ஆண்டுகளின் போது 77 வழங்குநர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 17,481,824 தொகையான கொள்வனவு முற்பணங்கள் மீளாய்வாண்டு வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) ஒப்பந்த முற்பணங்கள

வழங்குநர்கள் அல்லது ஒப்பந்தகாரரிற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் உரிய ஒப்பந்த காலத்தின் போது அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 2010 முதல் 2013 வரை மற்றும் முன்னைய 05 ஆண்டுகளின் போது 30 வழங்குநர்கள் அல்லது ஒப்பந்தகாரரிற்கு வழங்கப்பட்ட ரூபா 29,108,037 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டு வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) கடன்கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டியவைகள்**

(i) ஒரு ஆண்டிற்கு மேலான 17 கடன்கொடுத்தோர் 2-5 ஆண்டுகளிற்கு இடையிலான 51 கடன்கொடுததோர் 5 ஆண்டுகளிற்கு மேலான ஒரு கடன்கொடுத்தோர் முறையே ரூபா 4,617,450, ரூபா 14,635,982 மற்றும் ரூபா 1,521,036 தொகை மீளாய்வாண்டு இறுதிவரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டு இறுதியளவில் அக்கரைப்பற்று மேலதிக மாகாண அலுவலகத்துடன் தொடர்பான ரூபா 1,119,113 தொகையான நேரடித்தொழிலாளர் கூலிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2009 முதல் 2014 ஆம் ஆண்டுகள் தொடர்பான ரூபா 36,176,600 தொகையான குத்தகை வாடகை மீளாய்வாண்டிலும் அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) செலுத்த வேண்டிய பிடிகாசு**

(i) 774 ஒப்பந்தங்கள் தொடர்பான ரூபா 620,406,926 தொகையான பிடிகாசு 3 முதல் 10 ஆண்டுகள் வரையான காலத்திற்கு இடையில் தீர்க்கப்படாது இருந்தது.

(ii) ரூபா 5,486,278 ஆன மேலதிக கழிப்பனவாக பிடிகாசு இருந்த போதிலும் பட்டியல்களில் போதிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) அட்டுறு செலவினம் மற்றும் ஒப்பந்த செலுத்தவேண்டியவை**

(i) ஒரு ஆண்டிற்கு மேலாக இருந்த ரூபா 7,008,077 மற்றும் ரூபா 2 முதல் 5 ஆண்டுகள் வரையான காலத்திற்கு இடையில் இருந்த ரூபா 46,913,405 தொகையான அட்டுறு செலவினத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகள் தொடர்பான ரூபா 278,062,288 தொகையான ஏனைய ஒப்பந்தகாரர்களிற்கு செலுத்த வேண்டியவை தொடர்பில் மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) வாடகை வருமானம் மற்றும் பெறவேண்டிய வாடகை**

3 ஆண்டுகளிற்கு மேலாக கண்டி நிலக் கீழ் வழியிலுள்ள கடைகளிலிருந்து ரூபா 1,622,491 தொகையான வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) ஊழிர்களிடமிருந்து ஏனைய பெறவேண்டியவை**

(i) 66 ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 5,655,091 கூட்டு மொத்த தொகையான உத்தியோகத்தர் கடன்களை அறவிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க நிறுவனங்களில் வேலைக்கமர்த்தப்பட்ட 101 வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டு தொடர்பான ரூபா 696,394,067 கூட்டுமொத்த தொகையான அதிகாரசபைக்கான பணிக்கொடை கொடுப்பனவை மீளளிப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஏனைய நிறுவனங்களில் வேலைக்கமர்த்தப்பட்ட 2014 ஆம் ஆண்டு தொடர்பாக ரூபா 62,757,658 கூட்டு மொத்த தொகையான 94 வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களிற்கு செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் ஏனைய படிகளை மீளளிப்பதற்கு மீளாய்வாண்டிலும் தவறியிருந்தது.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 7,954,777 கூட்டு மொத்த தொகையான வாடிக்கையாளர் வைப்புக்கள் மற்றும் தாமதக் கட்டணங்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு மற்றும் நாளேட்டு உறுதிச்சீட்டிற்கான விளக்கவுரை போன்ற சான்றுகள் கிடைக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்யவோ அல்லது மெய்மையாய்வு செய்யவோ முடியாதிருந்தது.

**2.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்டபின்வரும் இணங்காமைகள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு | விபரங்கள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 135, 138(6) மற்றும் 139(1) | உள்நாட்டு வங்கி நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் வீதி நிர்மாணங்களிற்காக பெறப்பட்ட கடன்களிலிருந்து ரூபா 14,099.3 மில்லியன் செலவழிப்புகளில் அதிகாரமளித்தல், அனுமதித்தல், சான்றுபடுத்தல் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பில் அதிகாரசபையின் செயற்திட்ட பிரிவால் நிதிப்பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இதன்படி, வீதி நிர்மாணத்திற்காக மஹநெகும கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா 6,426 மில்லியன் தொகையான முற்பணங்கள் சான்றுபடுத்திய ஆவணங்களை உள்ளடக்காமல் உறுதிச்சீட்டுகள் சான்றுபடுத்தப்பட்டு கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 396 | 8 வங்கிக் கணக்குகள் தொடர்பில் ரூபா 5,924,999 தொகையான 25 காலாவதியான காசோலைகளை இரத்துசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 373 மற்றும் 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 333 ஆம் இலக்க அலுவலக சுற்றறிக்கை | அதிகாரசபையின் 02 உப அலுவலகங்கள் மற்றும் 04 பிரிவுகள் என்பவற்றிற்கு வழங்கப்பட்ட ரூபா 1,415,139 கூட்டு மொத்த தொகையான சிறுசெலவு கட்டுநிதி மற்றும் எரிபொருள் கட்டுநிதிகள் மீளாய்வாண்டு இறுதிவரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் எஸ்சீஏ/05 ஆம் இலக்க வெளியீடு | (i) ஒப்பந்தங்களிற்கான கொடுப்பனவு அளவை மற்றும் கொடுப்பனவு அடிப்படையில் செய்யப்பட வேண்டிய போதிலும் விலை பட்டியல் மற்றும் செய்யப்பட்ட வேலைகளை அளவிடாமல் ‘‘மஹ நெகும’’ கம்பனிகளிற்கு 55 சந்தர்ப்பங்களில் ரூபா 6,126.37 மில்லியன் தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2006 கொள்வனவு வழிகாட்டலில் 5.4.4. ஆம் பிரிவு | (ii) கொள்வனவு வழிகாட்டலிற்கமைய ஏதாவது ஒப்பந்தம் ஏதாவது ஒப்பந்தங்களிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணை வைப்புடன் தொழிலாரம்பிப்பு முற்பணமாக ஒப்பந்த தொகையில் ஆகக்கூடியது இருபது சதவீதம் வழங்க முடியும். எவ்வாறாயினும், அதற்கு முரணாக எவ்வித பிணைவைப்பும் பெறாமல் மஹாநெகும கம்பனிக்கு அதிகாரசபையால் ரூபா 6,126.37 மில்லியன் முற்பணங்கள் வழங்கப்பட்டது. |
| (ஈ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 2008 ஒக்தோபர் 07 ஆந் திகதிய 294 ஆம் இலக்க நிதிச்சுற்றறிக்கை | கணகக்காளர் ரூபா 10 மில்லியன் வரையான கொடுப்பனவுகளிற்காக காசோலைகளில் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள போதிலும் ரூபா 10 மில்லியனிற்கு மேலான பெறுமதியுடைய காசோலைகள் அவரால் கையொப்பமிடப் பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 547.17 மில்லியனான நேரொத்த வரிக்கு முந்திய தேறிய மிகைக்கு எதிராக ரூபா 4,962.68 மில்லியன் வரிக்கு முந்திய பற்றாக்குறையை விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 5,509.85 மில்லியன் வீழ்ச்சியைக் காட்டுகின்றது. ரூபா 4,617 மில்லியனால் மொத்த வருமானத்தின் வீழ்ச்சி மற்றும் ரூபா 892.35 மில்லியனால் செலவினத்தின் அதிகரிப்பு மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக உள்ளன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்றில் காட்டப்பட்ட சில குறிப்பிடத்தக்க மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|
| | **2014** | **2013** |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 2,717 | (76.2) |
| தேறிய சொத்துக்கள் | 170,633 | 124,552 |

| | | |
|---|---|---|
| திரண்ட பற்றாக்குறை | (13,576) | (8,012) |

இதன்படி, தேறிய நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் தேறிய சொத்துக்கள் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டில் முறையே ரூபா 3,665.61 சதவீதம் மற்றும் 41 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதேநேரம் திரண்ட பற்றாக்குறையும் 69 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 தேசிய வீதிகள் மற்றும் பாலங்களின் பராமரிப்பு வேலைகள்

மீளாய்வாண்டிற்கான பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் பராமரிப்பு தொடர்பில் நிதிகளின் ஒதுக்கீடு மற்றும் உள்ளபடியான செலவினம் என்பன பின்வருமாறு உள்ளன.

| | | ஒதுக்கீடு | உள்ளபடியான செலவினம் | ஒதுக்கீட்டின் சதவீதமாக பயன்பாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| i) | ஒழுங்கான பராமரிப்பு | 1,850 | 2,543.17 | 137.46 |
| ii) | காலரீதியான பராமரிப்பு | 3,110 | 2,643.72 | 85.00 |
| iii) | வடிகாலமைப்பு மற்றும் கட்டமைப்பு முன்னேற்றம் | 940 | 610.22 | 64.91 |
| iv) | சமிஞ்சை விளக்கு முறைமை, வீதி விளக்குகள், வீதி சமிஞ்சை மற்றும் அடையாளமிடல் என்பவற்றின் பராமரிப்பு மற்றும் சிறிய வீதி பராமரிப்பு முன்னேற்றங்கள் | 800 | 575.63 | 71.95 |
| v) | அவசர பராமரிப்பு/ இடர் வேலைகள் | 1,280 | 1,421.68 | 111.06 |
| vi) | பெரிகளின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு | 8,000 | 7,801.85 | 97.52 |
| | **மொத்தம்** | **15,980** | **15,596.27** | |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பாதீடு ஊடாக 186 வீதிகளின் பராமரிப்பு பராமரிப்பு நடவடிக்கைகளிற்காக ரூபா 493.83 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த வீதிகள் ஆண்டிற்குள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பாதீட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்காமலும் வருடாந்த பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காமலும் 07 தேசிய வீதிகளின் பராமரிப்புகளில் மீளாய்வாண்டின் போது ரூபா 26.31 மில்லியன் தொகையை ஐந்து மாகாண பணிப்பாளர் அலுவலகம் செலவழித்திருந்தது.

(iii) வீதி அபிவிருத்தி அதிகாரசபை கொண்டிருக்காத வீதிகளின் பராமரிப்பிற்காக 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமில்லாதிருந்த 281 வீதிகளில் மீளாய்வாண்டின் போது ரூபா 1,248.14 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட வேண்டுமென இருந்த பராமரிப்பு நடவடிக்கைகளை முறைப்படி இணங்கானத்தவறியமை மற்றும் அதிகாரசபைக்கு சொந்தமில்லாதிருந்த வீதிகளின் பராமரிப்புக்கு ஏற்பட்ட கிரயம் போன்றன காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றலை அடைய முடியாதிருந்தது. வருடாந்த பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டம் 2014 யூன் 30 வரை திரும்பவும் திருத்தப்பட வேண்டியிருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 4.1.2 பொறியியல் சேவைகள் மற்றும் பால வடிவமைப்பு பிரிவின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உயர் மட்ட முகாமைத்துவத்தால் இந்த பிரிவின் வேலைத் திட்டத்தை அனுமதிப்பதற்கு முறைமையொன்று அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ஆண்டு தொடங்குவதற்கு முன்னர் இது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இருந்த போதிலும் வேலைத்திட்டம் 2014 நவம்பரில் திரும்பவும் திருத்தப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது 142 பாலங்கள் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதேநேரம், 2014 திசெம்பரில் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 84 பாலங்கள் தொடர்புபட்ட திட்டங்கள் இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 06 பாலங்கள் தொடர்புபட்ட முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைவாக இருந்தது.

(iii) இருபத்தியேழு பாலங்கள் மீளாய்வாண்டிற்கான வேலைத்திட்டத்திற்கு அப்பால் திட்டமிப்பட்டிருந்ததுடன் அதில் 07 பாலங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உடமையானதாக இருக்கவில்லை.

### 4.2 ஒப்பந்த நிர்வாகம்

### 4.2.1. வீதிப் புனரமைப்பு மற்றும் முன்னேற்றங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அரசாங்க நிதிகளின் கீழ் வீதிகளின் அகலமாக்கல் மற்றும் முன்னேற்றத்திற்கான ஒதுக்கீடுகள் மற்றும் செயலாற்றல் அறிக்கை, மாகாண பணிப்பாளர்களால் அமுலாக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கை என்பவற்றின் பிரகாரம், பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் ரூபா 16,238 மில்லியன் பெறுமதியான 141 வீதிகளின் அகலமாக்கல் வீதிகளின் அகலமாக்கல் மற்றும் முன்னேற்றங்கள் தொடங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதிவரையும் எந்தவொரு நிர்மாணங்கள் மற்றும் முன்னேற்றங்கள் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத 33 வீதிகளின் அகலமாக்கல் மற்றும் முன்னேற்றத்திற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2,757 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமில்லாத 900 வீதிகளிற்காக ரூபா 38,519 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது ரூபா 5,319 மில்லியன் கிரயத்துடன் 61 வீதிகளின் அகலமாக்கல் மற்றும் முன்னேற்றம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 50 சதவீதத்தை விட குறைந்த முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது ரூபா 16,503 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் அல்லாத 234 வீதிகளின் அகலமாக்கல் மற்றும் முன்னேற்றங்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 50 சதவீதத்தை விட குறைந்த முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது.

(ஆ) உள்நாட்டு வங்கி நிதியளிக்கப்பட்ட வீதிப்புனரமைப்புச் செயற்திட்டம் (எல்பீஎவ்பி)

வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது நாடுபூராவும் 1,433.85 கிலோ மீற்றர் நீளமான 64 முன்னுரிமை வீதிகளை புனரமைப்பதற்கு உள்நாட்டு வங்கிகளிடமிருந்து ரூபா 151.77 பில்லியன் தொகையான கடன்களை பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. இதன்படி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது 64 வீதிகள் புனரமைப்பதற்கு ரூபா 137.52 பில்லியன் பெறுமதியான ஒப்பந்தங்கள் வழங்கியிருந்தது. அதிகாரசபை வீதிகளின் நிர்மாணத்திற்காக ஒப்பந்தகாரர்களிற்கு கொடுப்பனவுகளை செய்யும் நோக்கில் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது 07 உள்நாட்டு வங்கிகளிடமிருந்து ரூபா 108,257.66 மில்லியன் மொத்தமான கடன்களை பெற்றிருந்தது. அதில் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 953.35 மில்லியன் தீர்க்கப்பட்டிருந்தது. இதன்படி, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனின் செலுத்தவேண்டிய பகுதி ரூபா 107,304.31 மில்லியனாகும் என அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான பெறப்பட்ட கடன்கள் மற்றும் நிலுவையாகவுள்ள கடன் பகுதி என்பவற்றின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **வங்கியின் பெயர்** | **ஆண்டிற்காக வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்கள்** | | | **2014 ஆம் ஆண்டின் போது திருப்பிச் செலுத்திய முதல்** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் மீதி** |
|---|---|---|---|---|---|
| | **2012** | **2013** | **2014** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | | |
| கொமர்ஷல் வங்கி | 1,267 | 634 | 2,647 | 128 | 4,420 |
| இலங்கை வங்கி | 3,703 | 9,637 | 10,402 | 218 | 23,525 |
| மக்கள் வங்கி | 3,369 | 5,234 | 4,806 | 607 | 12,800 |
| தேசிய சேமிப்பு வங்கி | 384 | 4,953 | 43,931 | - | 49,268 |
| அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 209 | 724 | *(32) | - | 901 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஹட்டன் நஷனல் வங்கி | - | 3,614 | 8,562 | - | 12,176 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | - | - | 4,214 | - | 4,214 |
| | **8,932** | **24,796** | **74,530** | **953** | **107,304** |

* 2013 இல் தவறுதலாக செலவு வைக்கப்பட்டதும் 2014 இல் திருத்தப்பட்டதும்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

(i) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களின் (எல்பிஎவ்பீ) கீழ் வீதி நிர்மாணத்திற்கான ஒப்பந்தகாரர்கள் கொள்வனவு வழிகாட்டலிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. பதிலாக உரிய வீதிகளிற்கான ஒப்பந்த பிரேரணைகளை ஒப்பந்தகாரர்கள் தாமே கொண்டு வந்திருந்தனர்.

(ii) ஒப்பந்தகாரரின் பிரேரணைகளை தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு (ரீஈசீ) முறைப்படி மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், வேலை விடயங்கள், அளவைகள், மதிப்பாய்வை ஆதாரப்படுத்தும் வீதங்கள் உள்ளடங்கலாக ஒவ்வொரு வீதிக்குமாக பொறியியலாருடைய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நெடுஞ்சலை நியம வீதத்தை (எகஎஸ்ஆர்) பயன்படுத்தி தொழில்நுட்ப குழுவால் ஒப்பந்தகாரருடைய பிரேரணைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அளவீட்டு பட்டியலில் (பிஓகியூ) ஒப்பந்தகாரரால் பிரேரிக்கப்பட்ட வீதங்கள் பொறியியலாருடைய வீதங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் உயர்வாக இருந்ததுடன் ஒப்பந்தகாரர்களிற்கு ஒப்பந்தகாரர்களின் வீதங்கள் முரண்பட்டிருந்தது.

(iii) நியம அமைச்சரவை நியமிக்கப்பட்ட கொள்வனவு குழு (எஸ்சீஏபிசீ) ஒவ்வொரு ஒப்பந்தத்திற்காகவும் இறுதி ஒப்பந்த தொகையை தீர்மானித்து சிபார்சு செய்திருந்தது. இதன்படி, 54 ஒப்பந்தங்களிற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவால் சிபார்சு செய்யப்பட்ட ரூபா 146,552.78 மில்லியன் தொகை நியம அமைச்சரவை நியமித்த கொள்வனவு குழுவால் ரூபா 155,794.94 மில்லியனிற்கு அதிகரிக்கப்பட்டிருந்தது. அத்தகையவாறு ரூபா 9,242.16 மில்லியன் மேலதிக கிரயம் எஸ்சீஏபிசி ஆல் வீதி நிர்மாணத்திற்காக சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

(iv) அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம், எல்பீஎவ்பி இன் கீழான சகல நிர்மாணங்களும் உள்ளுர் ஒப்பபந்தகாரர்களின் இயலளவை அதிகரிக்கும் நோக்கில் உள்ளுர் ஒப்பந்தகாரர்கள் ஊடாக செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், சில ஒப்பந்தகாரர்கள் ஏனையவர்களை விட அதிகளவு ஒப்பந்தங்களை வழங்கியிருந்தமையால் அதிகாரசபையால் இந்த நோக்கம் திருப்திகரமாக அடையப்பட முடியாதிருந்தது.

(v) 2012 இன் முற்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் மேலதிகமாக அஸ்பற் இடப்பட்டிருந்த சில வீதிப் பகுதிகள் எல்எவ்சீஎவ்பி இன் கீழ் புனரமைப்பதற்காக திரும்பவும் சேர்க்கப்பட்டிருந்தது.

(vi) உள்நாட்டு வங்கி நிதியளிக்கப்பட்ட செயற்திட்டம் 28 வீதிகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 55,392.2 மில்லியன் கடன் பெறுவதற்கு அமைச்சரவையிடமிருந்து அனுமதி பெற்றிருந்தது. பெறப்பட்ட கடனில், செயற்திட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் ஏனைய நடவடிக்கைகளில் ரூபா 28,000 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | தொகை ரூபா மில்லியன் |
|---|---|
| அமைச்சிற்கு வழங்கப்பட்ட நிதி | 3,741 |
| கிராமிய பால நிர்மாணப் பிரிவு | 105 |
| மஹாநெகும கம்பனி | 5,824 |
| கொடுப்பனவு பிரிவு | 282 |
| பிரதிப் பணிப்பாளர் வடிவமைப்பு | 30 |
| வீதி பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதிய கொடுப்பனவு | 358 |
| அஸ்பலற் பொறி | 2,374 |
| மாகாண பணிப்பாளர் அலுவலகம் | 3,631 |
| செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு | 6,140 |
| சீஐஜீஎவ்எல் | 16 |
| செயற்திட்ட பிரிவின் அகலமாக்கல் மற்றும் முன்னேற்ற வேலைகள் | 5,499 |
| | 28,000 |

மேலும், 28 வீதிகளிற்காக அனுமதிக்கப்பட்ட ரூபா 55,392.2 மில்லியன் தொகையான கடன்களில், முற்பணங்கள் மற்றும் செய்யப்பட்ட வேலைகளிற்காக ரூபா 21,238.98 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன்படி, செய்யப்பட வேண்டிய மிகுதி வேலைகளிற்காக பெறப்பட்ட கடனிலிருந்து செலுத்த வேண்டிய தொகை ரூபா 34,153.34 மில்லியனாக இருந்தது. ஆனால், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினை விட வேறு நடவடிக்கைகளிற்காக ரூபா 28,000 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்விளைவால், கிடைக்கக்கூடிய கடன் மீதி ரூபா 6,153.34 மில்லியனாக இருந்தது. இதன்படி, எதிர்காலத்தில் கட்டாயமாக நிதிப்பிரச்சனைகள் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது அதேநேரம் மிகுதி வீதி வேலைகளிற்காக கொடுப்பனவுகளை செய்ய கொள்கின்ற போதும் நிர்மாண வேலைகளை மோசமாக பாதிக்கக்கூடும் என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(vii) பெல்மடுல்ல – எம்பிலிபிட்டிய – நெகாகம வீதியை புனரமைப்பதற்கு மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்தின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் ரூபா 2,172 மில்லியன் தொகையான கடன் பெறப்பட்டிருந்தது. மொத்த ஒப்பந்த பெறுமதியில் 15 சதவீதத்திற்கு சமமான ரூபா 315 மில்லியன் பெறுமதியான நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டு இறுதியில் ஒப்பந்தகாரரால் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையானது 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 96 சதவீதத்திற்கு சமமான ரூபா 2,096 மில்லியன் தொகை கடனிலிருந்து பணவளிப்பு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தொழிலாரம்பிப்பு முற்பணம் உள்ளடங்கலாக ஒப்பந்தகாரருக்கு ரூபா 596 மில்லியன் மாத்திரம்

செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2014 நவம்பர் மாதத்தில் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட இடைகாலக் கொடுப்பனவு சான்றிதழ் இல. 04 இன் பிரகாரம் மேற்குறிப்பிட்ட வீதிக்கு முரண் இல. 1 ஆக ரூபா 18.45 மில்லியன் உள்ளடக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த முரண் எம்பிலிப்பிட்டியவில் தலைவருடைய வீட்டுடன் தொடர்புபட்ட நிர்மாண கிரயத்திற்காக ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

- ரூபா 142.6 மில்லியன் பெறுமதிக்கு முரண் இல. 2 இனை மேற்குறிப்பிட்ட காலத்திற்காக இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இல. 04 இன் கீழ் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த தொகை 9.21 கிலோமீற்றர் நீளமான வேறு 17 வீதிகளுடன் தொடர்புபட்ட நிர்மாண வேலைகள் காரணமாக எழுந்திருந்தன.

**(இ) செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு வழங்கப்பட்ட நிதிகள்**

(i) மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு கடன்களின் நிதிகளிலிருந்து வீதிகள் மற்றும் பாலங்களின் நிர்மாணத்திற்காக 21 செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு ரூபா 5,820 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட நடவடிக்கைகளிற்கு ரூபா 3,006 மில்லியன் தொகை மாத்திரமே செலவழிக்கப்பட்டிருந்தது. இருக்கின்ற ரூபா 2,814 மில்லியன் தொகை நேரடிச் செலவினம், செயற்திட்ட அலுவலகத்தின் பராமரிப்புச் செலவினம் மற்றும் விதிவிலக்கான செலவினம் என்பனவாக முறையே செலவழிக்கப்பட்டிருந்தது.

(ii) யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசர அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 20 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்த வழிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 22 செயற்திட்டங்களிற்கு வழங்கப்பட்ட உள்நாட்டு வங்கிக் கடன் நிதிகளின் பெறுமதி ரூபா 6,140.11 மில்லியனாக இருந்தது. அந்த செயற்திட்டங்கள் தொடர்பில் 2014 ஆம் ஆண்டிற்காக திறைசேரியிடமிருந்து பெறப்பட்டிருக்க வேண்டிய ஏற்பாடுகள் ரூபா 19,304 மில்லியனாகும். எவ்வாறாயினும், ரூபா 8,467 மில்லியன் தொகை மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

**(ஈ) அதிகாரசபையின் செயற்திட்ட பிரிவுக்கு வழங்கப்பட்ட நிதிகள்**

(i) அதிகாரசபையின் செயற்திட்ட பணிப்பாளர் அதிகாரசபையுடன் தொடர்புபட்ட ஆனால் உள்நாட்டு வங்கி நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்கு சொந்தமில்லாத வீதிகளின் அகலமாக்கல் / முன்னேற்றுதல் / புதுப்பித்தல்களில் 697 சந்தர்ப்பங்களில் ரூபா 5,499.43 மில்லியன் தொகை செலவழித்திருந்தார்.

(ii) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் இடையில் கைசாத்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 28 வீதிகள் செயற்திட்டத்திற்காக பெறக்கூடிய கடன்கள் ரூபா 34,200.79 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், இந்த மீதி ரூபா 49,238.98 மில்லியன் அல்லது மேலதிகமாக ரூபா 15,038.18 மில்லியன் அந்நோக்கத்திற்காக பெறப்பட்டிருந்தது.

(iii) உள்நாட்டு வங்கி நிதியளிக்கப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத வேலைகளிற்காக ரூபா 28,000 மில்லியன் கடன் பெறப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது செலுத்தப்பட்ட வட்டி ரூபா 466.08 மில்லியனாக இருந்தது.

**(உ) கலிகமுவ- ருவன்வெல்ல – கரவனெல்ல வீதியின் நிர்மாணம்**

அஸ்பலற் பிரயோகித்தல் மூலம் (கிமீ 000 + 0 முதல் 210 + 29 வரை) கலிகமுவ- ருவன்வெல்ல – கரவனெல்ல வீதியின் புதுப்பித்தல் ரூபா 2,472 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்தகாரருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், நிர்மாண வேலைகள் 2012 சனவரி 14 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2014 யூலை 14 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 17 இல் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- ஒப்பந்தகாரர்களின் நிதிப் பிரேரணைகள் ரூபா 2,602.48 மில்லியனாக இருந்த அதேநேரம் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழவின் பொறியியல் மதிப்பீடு ரூபா 2,328.27 மில்லியனாக இருந்தது. இதன்படி ரூபா 2,472.36 மில்லியன் பெறுமதியில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தமையால் ரூபா 144.09 மில்லியனால் பொறியியல் மதிப்பீட்டை விஞ்சியிருந்தது.

- இந்த வீதிகளில் மேற்கொள்ள வேண்டிய வேலைகள், அளவுகள், மற்றும் வீதங்கள் மற்றும் இதன்படி ஒப்பந்தகாரர்களின் நிதிப் பிரேரணையை மதிப்பாய்வு செய்தல் என்பன உள்ளடங்கலாக பொறியியல் மதிபீடு தயாரிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்தகாரரின் நிதிப் பிரேரணைகள் மேற்கொள்ள வேண்டிய வேலைகளையும் கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்ளின் கிரயம் மாத்திரம் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தது. ஓப்பந்தகாரரின் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இல. 23 இன் பிரகாரம் ரூபா 439 மில்லியனால் செலுத்த வேண்டிய பெறுமதியின் அதிகரிப்பு வேலை விடயங்களின் அளவீட்டு பட்டியலின் பெறுமதியை மிகையாக காட்டிருந்தது.

- தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு வேலை விடயங்கள், அளவுகள் மற்றும் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட அளவீட்டு பட்டியலின் அடிப்படையில் விலை வீதங்கள் என்பவற்றினை மதிப்பாய்வு செய்யாமல் ஒப்பந்த விலையை மாத்திரம் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தது. இதன்படி, ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் உள்ளடக்கப்பட்ட நில வேலைகள், பாலங்கள் மற்றும் வடிகால்கள் போன்ற வேலை விடயங்களிற்காக செலுத்த வேண்டிய பெறுமதியில் ரூபா 439.49 மில்லியன் அதிகரிப்பு அளவீட்டு பட்டியலின் பெறுமதியின் மிகையாக அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக அளவீட்டு பட்டியலில் குறிப்பிடப்பட்ட ஏனைய வேலைகளின் குறைவின் சாத்தியத்தன்மை அவதானிக்கப்பட்டது.

- நிலச் சரிவை பாதுகாப்பதற்கு இருந்த சுவர்களின் நிர்மாணத்திற்கான ஏற்பாடுகள் ஒப்பந்தகாரரின் அளவீட்டு பட்டியலில் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இந்த வீதிகளிற்கு 87 இடங்களில் 1,763 மீற்றர் நீளத்தில் தடுப்புச் சுவர் நிர்மாணிப்பதற்காக அவசியம் இனங்காணப்பட்டிருந்தது.

- இந்த வீதியில் ஒரு பாலம் மாத்திரம் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. போறியியல் அலுவலகம் சேதமடைந்த நிலையிலிருந்த

அந்த 5 பாலங்களை இனங்கண்டிருந்ததுடன் புனர் நிர்மாணம் செய்யபட வேண்டுமெனவும் கோரப்பட்டது. அத்துடன் வேறு 2 பாலங்கள் வீதிக்குப் பொருத்தமான வழியில் அகலமாக்கப்பட வேண்டும்.

**(ஊ) நரோவூட் அப்கோட் வீதியில் 9/12 ஆம் இலக்க பாலத்தின் நிர்மாணம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நோர்வூட் அப்கோட் வீதியில் 9/12 ஆம் இலக்க பாலத்தின் நிர்மாணம் ரூபா 3,456,682 தொகையில் ஒரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. புதிய ஒப்பந்தத்தின் பெறுமதி 4 மீற்றர் முதல் 7 மீற்றர் வரை பாலத்தின் அகலம் அதிகரிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 8,162,377 ஆக இருந்தது. ஒப்பந்தகாரர் நிர்மாண வேலைகளிற்காக ரூபா 3,425,378 தொகை பெற்ற பின்னர் வேலையிலிருந்து விலகியிருந்தார். இதிலிருந்து செயலாற்றல் பிணைமுறி இரத்து செசய்யப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது ஒப்பந்தகாரரிடமிருந்து பாதிக்கப்பட்ட கொடுப்பனவுகளை அறவிடமுடியாதிருந்தது. எவ்வாறாயினும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது இது தொடர்பில் ஒப்பந்தகாரருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பாலத்தின் மேற்பரப்பின் ஒரு பகுதியில் மாத்திரம் கொங்றீட் இடல் பிரயோகிக்கப்பட்டிருந்தது. அத்தகையவாறு பாலத்தின் வேறு பகுதி போதியளவு மேவப்பட்டிருக்காததாலும் அபாய சமிஞ்சை உருவாக்கப்பட்டிருக்காமையாலும் விபத்து ஆபத்துக்கள் உயர்வாக இருந்தது.

(iii) 2010 ஒக்தோர் 26 இல் நிர்மாணத்தை தொடங்குவதற்கும் 2011 மார்ச் 25 இற்கு முன்னர் முடிவுறுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிர்மாணம் 2014 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**(எ) விஜயபாகுகந்த பாலத்தின் நிர்மாணம்**

(i) ரூபா 30,833,502 தொகையான இந்த பாலத்தின் நிர்மாணத்திற்காக பொறியியல் மதிப்பீட்டு தகராறினால் 25.32 சதவீதத்தால் பொறியியல் மதிப்பீட்டை விடக் குறைவாக ரூபா 23,907,253 தொகையில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இக்காலத்தில் கவனத்திற்கொள்ள வேண்டிய விலையினை எடுத்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. நிர்மாணத்தின் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் அல்லது விசேட தரம் என்பன ஒப்பந்த விலையில் அளவு குறைவதால் எதிர்பார்க்க முடியாதிருந்தது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அல்லது தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் உண்மைதன்மை ஐயத்திற்கிடமாக உள்ளதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ii) பாலத்தின் நிர்மாண வேலைகள் 2011 ஏப்ரல் 04 இல் தொடங்குவதற்கும் 2012 சனவரி 09 இற்கு முன்னர் முடிவுறுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. 2012 செப்தெம்பர் 02 வரை கால நீடிப்பும் வழங்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 15 இல் உள்ளவாறு நிர்மாணம் பூர்த்தியாக்கப்பட்டிருக்காத போதிலும் கால நீடிப்பு வழங்கப்பட்டோ அல்லது தாமதக் கட்டணங்கள் சாட்டுதல் செய்யபட்டோ இருக்கவில்லை.

(iii) 2 சந்தர்ப்பங்களில் மேலதிக வேலைகள் காரணமாக ரூபா 11,992,423 ஆன தொகை அல்லது 50 சதவீதத்தால் ஒப்பந்த பெறுமதி அதிகரிக்கப்பட்டிருந்தது.

(iv) பாலம் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் வீதிகளோ அல்லது வீதி ஓரங்களோ நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேல், பாலத்தின் பாதுகாப்பிற்காக நுழைவு பகுதியில் நிழற்சுவர் இன்னமும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) பாலத்தின் உட்பகுதி மற்றும் மேற்பகுதியளில் பிரியோகிக்கப்பட்ட கொங்றீட்டில் மிகையாக வண்டல் அடை காணப்பட்டது. வீமில் பயன்படுத்தப்பட்ட இரு சட்டங்கள் பல சந்தர்பங்களில் வெளியே தெரிந்தது. பாலத்தில் வெளியேறும் வலது பகுதியில் நிழற்சுவரை மண் மூடியதால் துருப்பிடித்திருந்தது.

### 4.2.2 திருகோணமலை மாவட்டத்தில் உருக்குப் பாலங்களின் நிர்மாணம்

ஐக்கிய இராச்சியத்தின் உருக்கு பாலங்கள் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 3,831,936,290 தொகை செலவழித்து திருகோணமலை மாவட்டத்தில் பத்து உருக்கு பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டது. அதில் லங்கா பத்துமா மாலம் மற்றும் பலதோப்பூர் - சேருவில பாலம் நிர்மாணிப்பதற்காக ரூபா 336,328,087 ஆன தொகையும் மட்டக்களப்பு – திருக்கோவில் ஆறு- திருகோணமலை (ஏ-15) மற்றும் நகரத்தை பின்தள்ளி தொடர்புபட்ட அம்பேபுஸ்ஸ – குருநாகல்- திருகோணமலை (ஏ-6) என்பவற்றிலுள்ள 08 பாலங்களிற்காக ரூபா 3,495,608,203 ஆன தொகையும் ஏற்பட்டிருந்தது. 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ரூபா 3,495.6 மில்லியன் ஏற்பட்டு திருகோணமலையில் உட்சுற்று வட்ட வீதியில் எட்டு பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பாலங்கள் தொடர்புபடுகின்ற வீதிகளின் நிர்மாணம் 4 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் வாகனங்களின் போக்குவரத்தினை இயலக்கூடியவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2.3 கதிர்காமம் சுற்றுலாவிடுதியின் நிர்மாணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கதிர்காமம் சுற்றுலா விடுதியின் அடித்தள நிர்மாண வேலைகள் 2010 செப்தெம்பர் 28 இல் ரூபா 12,352,242 இற்காக ஒப்பந்தகாரருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரருக்கு ரூபா 11,771,448 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரருடன் கைசாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 2011 யூன் 07 இற்கு முன்னர் வேலையை பூர்த்தியாக்குவதற்கு உடன்பட்டிருந்தார். எவ்வாறாயினும், நிர்மாண வேலை 2014 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் குறிப்பிடத்தக்களவு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் முதலாவது மாடியின் நிர்மாணம் குறைபாடுகளைக் கருத்திற்கொள்ளாமல் 2014 திசெம்பர் 24 இல் ரூபா 7,922,316இற்காக அவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

### 4.4 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2009 நவம்பர் 19 இல் அமைச்சரவையால் செய்யப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், டென்சில் கொப்பேகடுவா மாவத்தையில் காணியின் குத்தகையில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 1,000 தொகையான வருடாந்த வாடகை செலுத்தப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், 2008 ஆகஸ்ட் 20 இல் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை கைச்சாத்திட்ட குத்தகை உடன்படிக்கையில் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், வருடாந்த குத்தகை வாடகை 50 ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 6 மில்லியனாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவையால் நிர்ணயிக்கப்பட்டவாறு வருடாந்த

குத்தகை கொடுப்பனவை குறைப்பதற்கு இயலக்கூடியவாறு குத்தகை உடன்படிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் குத்தகை வாடகைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ஆரம்ப கொடுப்பனவுகளிற்கு பதிலாக ரூபா 466,561,476 தொகையான குத்தகை வாடகை செலுத்தப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கையில் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், நிலுவையாகவிருக்கின்ற மீதிகள் மீது தண்டப்பணம் விதிக்க வேண்டும். ஆகவே, நிலுவையாகவிருக்கின்ற குத்தகை வாடகைகளில் ரூபா 29,839,114 கூட்டு மொத்த தொகையான தண்டப்பணங்கள் சாட்டுதல் செய்யப்படவேண்டும்.

(iii) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் நிதிகளைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அலுவலகம் 2014 நவம்பர் 29 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை புதிய கட்டிடத்திற்கு குடிபெயர்ந்திருக்காததுடன் 2014 திசெம்பரிலிருந்து 2015 மார்ச் வரை ரூபா 40,697,802 தொகையான கட்டிட வாடகை வெளியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், புதிய கட்டிடம் 2015 யூன் மாதம் வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) 2006 முதல் 2015 வரையான ஆண்டுகளின் போது 50 செயற்திட்டங்கள் தொடங்கப்பட்டிருந்ததன கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அந்த செயற்திட்டங்கள் நிர்மாண வேலைகளின் தாமதம், குறைவான செயலாற்றல், நிதிகள் கிடைக்காமை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அல்லாதவை நீக்கதல் என்பன காரணமாக இன்னமும் தொடங்குவதற்கு இருந்தது. அந்த செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 5,891.05 மில்லியனானதுடன் ஏற்கனவே ரூபா 705.39 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அசையாச் சொத்துக்கள்

(i) ரூபா 31,810,655 தொகையான உதிரிகளின் பயன்படுத்தப்படாத மற்றும் மெதுவாக அசையும் இருப்புக்கள் ஒரு ஆண்டிற்கு மேலாக களஞ்சியங்களில் இருந்தது.

(ii) சீருடைகள், சப்பாத்து மற்றும் செருப்புகள், ரயர் மற்றும் பொருள் இருப்பகள்- அஸ்பற் பொறி என்பவற்றின் ரூபா 1,989,955 தொகையான பழுதடைந்த பொருளிருப்பு அவற்றினை கைதவிர்ப்பு செய்வதற்கு கவனத்திற்கெடுக்காமல் 2008 முதல் 2009 வரை முற்கொண்டுவரப்பட்டிருந்தது.

**4.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

தனியார் கம்பனியுடன் அதிகாரசபையால் நிறைவேற்றப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையாக இருந்தது. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

**(i) மஹா நெகும கம்பனிகளிடமிருந்து பெறவேண்டிய தொகை**

- அதிகாரசபையால் மஹா நெகும கம்பனிகளிற்கு வாடகைக்கமர்தப்பட்ட வாகனங்களிற்கான வாடகை 2012 பெப்ரவரி 10 இல் உரிய கம்பனிகளுடன்

கைசாத்திட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2008 முதல் 2013 வரையான காலத்திற்காக அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 488,868,233 தொகையான வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- மஹா நெகும கம்பனிகளிற்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட 20 பழுதடைந்த வாகனங்கள் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

- மஹாநெகும வீதி நிர்மாணம் மற்றும் 2004 – 2007 வரையான ஆண்டுகளின் போது உரிய கம்பனிக்கு சொத்துக்கள், நுகர்வுப்பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த உபகரணக் கம்பனி என்பவற்றிலிருந்து பெறவேண்டிய ரூபா 63,276,545 மற்றும் ரூபா 7,536,165 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ii) மஹா நெகும கம்பனிகளுக்கு செலுத்த வேண்டிய தொகைகள்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூன்று மஹாநெகும கம்பனிகளிற்கு செலுத்த வேண்டிய தொகைகள் ரூபா 225,297,655 ஆனதுடன் அதில் 2013 இற்கு ரூபா 9,993,329 தொகை தொடர்புபட்டன. மீளாய்வாண்டு இறுதி வரையும் அந்த செலுத்த வேண்டிய தொகைகளை தீர்ப்பதற்கோ அல்லது பெறவேண்டிய மீதிகளிற்கு எதிராக சரிசெய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**4.7 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) பதவியணி**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் பதவியணியின் நிலைமையின் பிரகாரம், 11 பதவிகளில் 711 வெற்றிடங்களும் 07 ஏனைய பதவிகளில் 1,400 மிகைகளும் உள்ளதென வெளிப்பட்டது.

(ii) வீதி அபிவிருத்தி அதிகாசபையின் செயற்பாடுகளை செய்வதற்கு அவசியமாகவுள்ள தொழில்நுட்ப சேவையில் 148 பதவிகள் மற்றும் எழுதுனர் மற்றும் இணைந்த சேவையினரின் 47 பதவிகளில் வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டது. இந்த நிலைை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயலாற்றலை பாதகமாக பாதித்திருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்**

(i) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவின் பிரகாரம், உரிய அமைச்சு அல்லது ஏதாவது வேறு அரசாங்க நிறுவனங்கள் சார்பில் ஏதாவது சந்தர்ப்பங்களின் கீழ் செலவினம் செய்வதற்கு அல்லது அதன் வளங்களை ஈடுபடுத்தல் என்பவற்றிற்கு பொது முயற்சிகள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இந்த மீறுகை அதிகாரசபை ஏனைய நிறுவனங்களிற்கு அதன் 114 உத்தியோகத்தர்களை விடுவித்திருந்ததுடன் பின்னர் அந்த

ஊழியர்கள் மீளாய்வாண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீள இணைக்கப்பட்டிருந்தது.

(ii) 7 வேறு நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஏழு ஊழியர்களிற்கு ரூபா 2,683,222 தொகையான வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த சம்பளங்கள் பெறவேண்டியவையாக கடன்பட்டோர் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் ரூபா 2,053,066 மற்றும் 2013 ஆம் ஆண்டில் ரூபா 630,156 தொகைகள் இது தொடர்புபடுகின்றது என அவதானிக்கப்பட்டது.

**(இ) கொள்வனவு பிரிவின் செயலாற்றல்**

(i) கொள்வனவு பிரிவு முறையான மற்றும் ஆக்கபூர்வமான வழிகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்வனவு மேற்கொள்ளும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்டிருந்தது. ஆனால், கொள்வனவு பிரிவின் நோக்கங்கள் பல ஆண்டுகளிற்கு மேலாக படிப்படியாக குறைவடைந்திருந்தது.

(ii) பிரிவின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 37 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணி 16 ஆக இருந்தது. பணிப்பாளர் மற்றும் வழங்கல் உத்தியோகத்தர் பிரிவில் ஒரு உத்தியோகத்தர் மாத்திரமே உள்ளனர்.

(iii) ரூபா 24.67 மில்லியன் தொகையான காகிதாதிகளின் கொள்வனவு கொள்வனவு பிரிவால் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது அதேநேரம் ஏனைய கொள்வனவுகள் மீளாய்வாண்டின் போது ஏனைய பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(இ) திட்டமிடல் பிரிவு**

(i) திட்டமிடல் பிரிவின் தாபன கட்டமைப்பின் பிரகாரம், பிரிவின் பதவியணி தேவைகள் 117 ஆக இருந்தது. எவ்வாறாயினும், இருக்கின்ற பதவியணியில் 81 ஊழியர்கள் மாத்திரம் உள்ளதுடன் இதன்படி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 36 வெற்றிடங்கள் உள்ளன.

(ii) திட்டமிடல் பிரிவின் தாபன கட்டமைப்பின் பிரகாரம் 117 உத்தியோகத்தர்களின் உத்தேசிக்கப்பட்ட பதவியணி நிர்வாக பிரிவின் உத்தேசிக்கப்பட்ட பதவியணியுடன் பொருந்தியிருக்கவில்லை.

**5. கணக்குப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

(i) 2003 யூன் 02 ஆந் திகதிய ‘‘நல்ல ஆளகைக்கான பொது முயற்சி வழிகாட்டல்களின்’’ பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டத்தின் நாளதுவரையாக்கப்பட்ட பிரதிகள் ஒவ்வொரு நிதியாண்டு தொடங்குவதற்கு குறைந்தது 15 நாட்களிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், அதிகார சபையானது 2014- 2018 வரையான காலத்திற்காக கூட்டிணைந்த திட்டத்தை 2015 சனவரி 01 இலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) மனித வள பாதீட்டிலிருந்து ஒன்று திரட்டப்பட்டிருந்த முயற்சிளினது ஒவ்வொரு பிரிவினதும் வேண்டப்பட்ட ஆளணியை கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த

போதிலும் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சி சுற்றறிக்கையின் பிரகாரம், 2014- 2018 இற்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் அல்லது 2014 ஆம் ஆண்டிற்கான அதிகாரசபையின் பாதீடு இதன்படி பதவியணி விபரங்களை வழங்கியிருக்கவில்லை.

## 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

(i) மீளாய்வாண்டிற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மீள திருத்திய பாதீடு 2015 பெப்ரவரி 25 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், திருத்தப்பட்ட பாதீட்டுடன் பொருத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயல் நடவடிக்கை திட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 ஆம் நிதியாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கை அதிகாரசபையின் மேவுகை சபைக்கு 2015 மார்ச் 09 இலும் முன்னளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

(i) 2003 யூன் 02 ஆந் திகதிய "நல்ல ஆளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்களின்" பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம், வருடாந்த பாதீடு நிதியாண்டு தொடங்குவதற்கு 15 நாட்களிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீடு 2014 பெப்ரவரி 19 இலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2014 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2 சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டிருந்ததுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் முறையே 2014 மே 26 மற்றும் 2014 ஒக்தோபர் 23 இல் பெறப்பட்டிருந்தது. மேலும், திருத்தப்பட்ட பாதீடுகள் மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபை தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு
(ஆ) பேரேட்டு கணக்கள் மற்றும் பட்டோலைகளின் பராமரிப்பு
(இ) தொடர்புபட்ட தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்பாடு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) வீதிப் பராமரிப்பு மற்றும் வாடிக்கையாளர் வேலைகள்
(ஊ) பிராந்திய அலுவலகங்களின் முகாமைத்துவம்
(எ) மோட்டார் வாகனங்களின் பாவனை
(ஏ) காணிகளின் பயன்பாடு
(ஐ) பொருளிருப்பு கட்டுப்பாடு